<u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14 ஆம் நாள் வெள்ளிக் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 348/ 2018

C.N.R.No.TNTS02-000576-2018

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
சேர்ந்தமரம் காவல் நிலையம்,
கு.எண் : 186/ 2017 ... குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

வேணுகோபால்,
த.பெ. தியகராஜன்,
சோபனாபுரம்,
திருச்சிராபள்ளி.

... எதிரி

இந்த வழக்கானது 06.08.2018 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.348/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 25.02.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 05.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. அப்பாதுரை அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும்

சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (14.08.2026) இந்நீதிமன்றம் வழங்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

1. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>**

கடந்த 25.09.2017 ம் தேதி 15.30 மணிக்கு சேர்ந்தமரம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட நடுவக்குறிச்சி பஸ்டாப் வடபுறம் வைத்து இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 34 R 7323 என்ற லாரியின் ஓட்டுனர் எதிரி வேணுகோபால் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எதிரே வந்த TN 72 U 4179 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரான அர்ஜீனா மற்றும் அவரது பின்னால் உட்கார்ந்திருந்த லூர்து பிரின்ஸ் ஆகியோர்கள் மீது மோதி அவர்கள் சம்பவ இடத்திலே இறந்து விட்டதாகவும், எனவே எதிரி இதச பிரிவுகள் 279, 304(A) –ன் படி குற்றங்கள் புரிந்துள்ளதாக சேர்ந்தமரம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின்பேரில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு பற்றி எதிரியிடம் வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எதிரி குற்றச்சாட்டை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசுத்தரப்பில் அ.சா–1 முதல் அசா–4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசுத்தரப்பு அசாஆ–1 முதல் அசாஆ–3 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 279, 304(A) (2 எண்ணிக்கை)–ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

6. **<u>தீர்வு:–</u>**

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரி வேணுகோபால் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எதிரே வந்த TN 72 U 4179 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரான அர்ஜீனா என்பவரும் அவரது பின்னால் உட்கார்ந்திருந்த லூர்து பிரின்ஸ் ஆகியோர்கள் மீது மோதி அவர்கள் சம்பவ இடத்திலே இறந்து விட்டதாக கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) (2 எண்ணிக்கை) –ன் படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கின் புகார்தாரரான அசா.1 சுப்பிரமணியன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், "சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் என்னுடைய மைத்துனர் அர்ஜினனுக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு நான் காவல் நிலையம் சென்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது" என்று கூறியுள்ளார். அசா–1 அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

8. கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அசா–2 செல்வக்குமார் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், "எதிரியை எனக்கு தெரியாது. அசா–1 சுப்பிரமணியன் என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சுப்பிரமணியனின் உறவினர் அர்ஜுன் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக கூறி என்னை அழைத்தார்கள். நான் அர்ஜுனனின் அப்பா, அம்மா, மாமா சுப்பிரமணியன் ஆகியோர்களை அழைத்து கொண்டு சங்கரன்கோவில் அரசு

மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு அர்ஜுன் இறந்திருந்தார். நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை" என்று கூறியுள்ளார். அசா–3 துரைப்பாண்டி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் "எதிரியை எனக்கு தெரியாது. அசா–1 சுப்பிரமணியன் என்பவரை எனக்கு தெரியாது. இறந்து போன லூர்து பிரின்ஸ், அர்ஜுன் ஆகியோர்களை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறியுள்ளார். அசா–2, அசா–3 ஆகியோர்கள் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

9. இவ்வழக்கின் புகார்தாரரான அசா–1 மற்றும் முக்கிய சாட்சிகளான அசா–2, அசா–3 ஆகியோர்கள் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் இதர சாட்சிகளை விசாரிப்பதால் எந்த பயனும் ஏற்படாது என்று கருதி அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எதிரியை இந்த வழக்கோடு இணைக்கும் வகையில் எந்த சாட்சியங்களும் அரசுத்தரப்பில் இல்லை. எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் எனவே எதிரி குற்றவாளி அல்ல எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவு</u>:

10. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 304(A) (2 எண்ணிக்கை) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A) (2 எண்ணிக்கை) – ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

11. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.08.14 18:34:53 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. சுப்பிரமணியன் | புகார்தாரர் |
| 2 | திரு. செல்வக்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. துரைப்பாண்டி | கண்ணுற்ற சாட்சி |
| 4 | திரு. தர்மராஜ் (காவல் ஆய்வாளர்) | வழக்கு பதிவு செய்த சாட்சி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் மனுவில் அசா–1 ன் கையெழுத்து | அ.சா.1 |
| 2 | புகார் மனு | அ.சா.4 |
| 3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : – இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள்கள்: – இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.08.14 18:34:57 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தார்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.